**செய்தி வெளியீடு எண்.593** **நாள்:16.07.2010**

**மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் டிட்கோ** (தொழில் வளர்ச்சி நிறுவனம்) **மற்றும் சி.ஐ.எல். நிறுவனங்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் உணவுப் பொருள் பதப்படுத்தும் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைத்திட ஒப்பந்தம் கையெழுத்தானது.**

@@@

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்அவர்கள் தமிழக அரசின் 2010ஆம் ஆண்டு தொழில் துறை மானியக் கோரிக்கையின்போது தென் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியில் மேம்படுத்தும்பொருட்டு, தூத்துக்குடி மாவட்டத்தில் உணவுப்பொருள் பதப்படுத்தும் சிறப்பு பொருளாதார மண்டலம் ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன் அடிப்படையில் தூத்துக்குடி மாவட்டம், வடக்கு கரசேரி மற்றும் திம்மராஜபுரம் கிராமங்களில் சுமார் 425 ஏக்கர் பரப்பளவில் உணவுப் பொருள் பதப்படுத்தும் சிறப்பு பொருளாதார மண்டலம் ஒன்றை உருவாக்குவதற்கு டிட்கோ (தொழில் வளர்ச்சி நிறுவனம்), மற்றும் சி.சி.சி.எல். இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட் (சி.ஐ.எல்.) ஆகிய நிறுவனங்களுக்கிடையேயான கூட்டுத் துறை (Joint Venture) ஒப்பந்தம், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இன்று (16.07.2010) புனித ஜார்ஜ் கோட்டையில் கையெழுத்தானது.

சி.ஐ.எல். தெரிவித்துள்ளபடி, இத்திட்டத்திற்கான கட்டுமான வசதிகளை உருவாக்க மொத்த மதிப்பீடு ரூபாய் 550 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் ரூபாய் 2500 கோடி அளவிற்கு முதலீடுகள் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஏறத்தாழ 10 ஆயிரம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறப்பு பொருளாதார மண்டலத்தில் அமையும் உணவு பதப்படுத்தும் திட்டத்தை சுமார் 294 ஏக்கர் நிலப்பரப்பளவில் செயற்படுத்த மத்திய அரசின் முறையான அறிக்கை பெறப்பட்டுள்ளது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உலகத்தரம் வாய்ந்த வசதிகளை கொண்டதாக உருவாக்கி, தேசிய மற்றும் உலகளாவிய நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஏதுவாக அமைக்கப்படும். இத்திட்டத்திற்கான பெருந்திட்டத்தை அமெரிக்காவைச் சேர்ந்த பொறியியல் ஆலோசகர்கள் (SSOE Inc. USA) தயார் செய்துள்ளனர்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இன்று கையெழுத்தான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தலைவர், டிட்கோ(தொழில் வளர்ச்சி நிறுவனம்), திரு. ராஜீவ் ரஞ்சன், இஆப., சி.சி.சி.எல். இன்ப்ராஸ்டிரக்சர் லிமிடெட் (சி.ஐ.எல்) மற்றும் சி.சி.சி.எல். பியர்ல் சிட்டி ஃபுட் போர்ட் (எஸ்.இ.இஸட்) லிமிடெட் சார்பில் அவற்றின் தலைவர் திரு. ஆர். சரபேஸ்வர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

**வெளியீடு:**

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை தலைமைச் செயலகம், சென்னை-9